பாடம்
19

# குடும்ப ஒன்றிப்பு

(ஒரு நாள் மறைக் கல்வி வகுப்பு முடிந்து வீடு செல்லும் போது)

**நிமல்** : அருள் நாளைக் காலை எங்கள் வீட்டிற்கு வர முடியுமா? மேரி, ராதா, ஷேன், ரூபன் ஆகியோரையும் அழைக்க விரும்புகின்றேன். நாம் எல்லோரும் சேர்ந்து விளையாடுவோம். உங்களுடைய தங்கையையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்.

**அருள்** : ஆம் ....... வருகிறேன்.

**நிமல்** : நாம் கொஞ்ச நேரம் விளையாடிவிட்டுப் பின்னர் பகல் சாப்பாடும் எங்கள் வீட்டில் சாப்பிடலாம். நாம் எல்லோரும் உல்லாசமாக இருக்கலாம்.

**அருள்** : ஆ ...... நாளை ஞாயிற்றுக்கிழமை அல்லவா? எனக்கு இப்போது தான் அது ஞாபகம் வந்தது.

**நிமல்** : இனி என்ன? நாளை லீவு நாள் தானே.

**அருள்** : ஆனால், ஞாயிற்றுக் கிழமை எங்கள் வீட்டாருக்கு ஒரு விசேடமான நாளாகும். எங்களுடைய அப்பா வாரத்திற்கு ஒரு முறை தான் வீட்டிற்கு வருவார். எங்கள் வீட்டார் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை தான் ஒன்று சேர்வார்கள். அப்பா அம்மா உட்பட நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து காலையிலே திருப்பலிப் பூசைக்குச் செல்வோம்.

**நிமல்** : நீங்கள் பூசை முடிந்து வீட்டிற்கு வந்த பிறகு வாருங்கள்.



அருள் : அப்படியா? முடியாது. ஏனென்றால், நாங்கள் கோயிலிலிருந்து வீட்டிற்கு வந்த பின்னர் எல்லோரும் ஒன்று சேர்ந்து வீட்டைச் சுத்தம் செய்வோம். நானும் அப்பாவும் உடுப்புத் தோய்த்து வெய்யிலில் போடுவோம். வீட்டில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்வதற்கு அன்றைக்குத் தான் அப்பா எனக்குச் சொல்லித் தருவார். அம்மா சமையல் செய்யும் போது, நாங்கள் எல்லோரும் அவருக்கு உதவி செய்வோம். சமையலறையில் நாங்கள் பல விடயங்களைப் பற்றி உரையாடுவோம். வேடிக்கை விளையாட்டுக்களும் விளையாடுவோம். எனக்கு ஞாயிற்றுக் கிழமை யில் வீட்டில் இருக்கத்தான் விருப்பம்.

நிமல் : உண்மையாகவா? நீங்கள் சொல்லுவதைக் கேட்கும் போது எனக்கும் சந்தோசமாக இருக்கிறது.

அருள் : ஆம் நிமல், உணவு தயாரித்து முடிந்தவுடன் நாங்கள் எல்லோரும் குளித்து முழுகிவிட்டு உணவு மேசையை ஆயத்தம் செய்வோம். அம்மா, அப்பா, நான், தங்கை, தம்பி, எனது பாட்டி ஆகிய எல்லோரும் மேசையைச் சுற்றி அமர்வோம். சாப்பிட ஆரம்பிக்க முன்னர் அப்பா எங்களுக்குச் செபிக்கக் கற்றுத் தருவார்.

"இயேசுவே இந்த உணவை எங்களுக்கு இன்று தந்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இந்த உணவை உண்ணும் எங்களுக்குத் தேவையான பெலனையும், ஆன்ம சுகத்தையும் தந்தருளும். எங்களுடைய குடும்பத்தினரை அன்புடன் பாதுகாத் தருளும. உம்மை அன்பு செய்ய எங்களுக்கு வரம் அருளும், ஆமென்.

இப்படியான சிறிய செபங்கள் சொல்லுவதற்கு இப்போது எனக்கு நன்றாகத் தெரியும்.

**நிமல்** : எங்களுடைய வீட்டாருக்கும் இவ்வாறு சேர்ந்து உணவு உண்ணக் கிடைக்குமானால் எவ்வளவு நல்லது.

**அருள்** : ஆம் நிமல், அப்போது தான் வீட்டார் எல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை நீரும் உணர்ந்து கொள்ள முடியும். குடும்பத்தோடு ஒன்றித்து இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாகச் செயற்படவும் முடியும்.

ஆம் நிமல், நாங்கள் மத்தியானம் ஒன்று சேர்ந்து உணவு உண்ணும் போது, பல விடயங்களைப் பற்றிப் பேசுவோம். அப்பா வேலைத் தலத்தைப் பற்றிக் கூறுவார். நாங்கள் எங்கள் படிப்பு விடயங்களை அப்பாவிடம் கூறுவோம். அதே போல எங்கள் அயலவர்களுக்கு நாங்கள் என்ன உதவிகள் செய்யலாம் என்பது பற்றியும் கலந்துரையாடுவோம்.

சில ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பா எங்களையும் அழைத்துக் கொண்டு முதியோர் இல்லத்திற்குப் போவார். அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவார்.

எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு ஏழை வயோதிபர் இருக்கிறார். அந்த வீட்டில் வேறு யாருமில்லை. நாங்கள் அந்தத் தாத்தாவைப் பார்ப்பதற்குச் செல்வோம். உணவும் கொண்டு போய்க் கொடுப்போம். நாங்கள் அங்கு வருவதை அவர் ஆவலுடன் எதிர்பார்ப்பார்.
எங்களுடைய அப்பா சொல்லுகிறார், அந்தத் தாத்தா வழியாக நாம் இயேசுவைச் சந்திக்க முடியுமாம்.



**நிமல்** : அப்படியானால், நான் வீட்டிற்குப் போகிறேன். அருள், உங்களுக்கு இறை ஆசிகள்.

**அருள்** : உங்களுக்கும் இறை ஆசிகள்.

கீழ்வரும் பாடலைச் சேர்ந்து பாடுங்கள்

**இயேசு எனது தலைவனாய்**

இயேசு எனது தலைவனாய் இருக்கின்றார்
யாருக்கு நான் அஞ்ச வேண்டும்
இயேசு எனது மீட்பராய் இருக்கின்றார்
வேறு எனக்கு என்ன வேண்டும்

எனது சின்ன ஆன்மாவுமே
ஆண்டவரில் அக மகிழும்
ஆண்டவரின் மகிமை ஒன்றே நிதமும் பாடிடுமே
ஆண்டவரின் சந்நிதியில் இளைப்பாறிடும்

நண்பர்கள் பிரிந்து செல்லுகிறார்கள்.

**ஒப்படை :**

1. இறை குடும்பத்தில் காணப்படும் பண்புகளை எழுதுக.
2. திருப்பலியில் பங்கு கொண்டு இறை வார்த்தைக்குச் செவிமடுக்க முயற்சி செய்யுங்கள்.
3. முதல் முறையாகத் தேவநற்கருணை பெறுவதற்கு இவ்வருடம் உமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. உங்களுடைய குடும்பத்தவர்களுடன் சேர்ந்து அதற்காக வாரம் ஒரு முறையாவது செபியுங்கள்.